# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறைத் தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 54/2012**

திரு. M. இராசு,
தலைவர் அனைத்து வியாபாரிகள் சங்கம்,
புதுப்பட்டு .P.O.
சங்கராபுரம் (T.K.) ...... மேல் முறையீட்டாளர்
( திரு. M. இராசு )

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கள்ளக் குறிச்சி மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம் .......... எதிர்மனுதாரர்
கள்ளக் குறிச்சி (திருமதி S. பிரேமா
உதவி செயற் பொறியாளர் / மேற்கு)

**கேட்புரை நாள் : 14–2–2013**

**ஆணை நாள் : 21– 2– 2013**

திரு M. இராசு, தலைவர், அனைத்து வியாபாரிகள் சங்கம், புதுப்பட்டு அவர்களின் 17–12–2012 நாளிட்ட மனுவானது மேல் முறையீட்டு மனு எண் 54/2012 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் மீது 14–2–2013 அன்று மின் குறை தீர்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனு, எதிர் மனுதாரரின் பதிலுரை, கேட்புரை நாளில் இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ் கண்ட ஆணை மின் குறை தீர்ப்பாளரால் வழஙகப்படுகிறது.

**ஆணை**

**1. மேல் முறையீட்டாளரின் வேண்டுகோள்:**

புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ள புதுப்பட்டு, அனைத்து வியாபாரிகளின் சங்கத்தின் 60 வணிக மின் இணைப்புகளுக்கு அந்த இடத்தின் உரிமைச் சான்று வட்டாட்சியரிடம் பெற்று கொடுத்தால் தான் மின் இணைப்பு தொடர்ந்து இருக்கும் இல்லையென்றால் மின்இணைப்பு துண்டிக்கப்படும் என்று உதவி மின் பொறியாளர் / புதுப்பட்டு அவர்கள் 12–12–2012 நாளிட்ட

கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, மின் இணைப்பு துண்டிப்பு நடவடிக்கையை நிறுத்த உத்தரவு இடவேண்டும் என்று கேட்டுள்ளார்.

## 2. <u>வழக்கின் சுருக்கம்:</u>

புதுப்பட்டு அண்ணா நகரில் புறம்போக்கு நிலத்திலுள்ள சுமார் 58 கடைகளுக்கு மின் இணைப்பு பெறப்பட்டு மின் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த மின் இணைப்புகள் எல்லாம் புறம்போக்கு நிலத்தில் உள்ள கட்டடங்களுக்கு வெவ்வேறு காலக் கட்டடங்களில் அதாவது 1980 முதல் 2009 வரை வழங்கப்பட்டுள்ளன. இந்த மின் இணைப்புகள் தவறான உரிமை சான்று அளிக்கப்பட்டு பெறப்பட்ட மின் இணைப்புகள் என்று புகார் வந்ததால், கிராம நிர்வாக அலுவலரிடம், விவரங்கள் பெறப்பட்டு 58 மின் இணைப்புகள், புறம் போக்கு நிலத்தில் உள்ளவை என்று அறியப்பட்டு அவற்றிற்கான உரிமை சான்று மின் இணைப்பு உரிமைதாரர்களிடம் கேட்கப்பட்டு, மின் இணைப்புஉரிமையாளர்களால் அந்த சான்றிதழ்கள் கொடுக்கப்பட வில்லை என்பதினால் அந்த மின் இணைப்புகளை துண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டி புதுப்பட்டுவின் உதவி பொறியாளர் 10.1.2012, 26.4.2012, 31.5.2012, 11.6.2012 மற்றும் 12.12..2012 ஆகிய நாட்களில் உரிமையியல் சான்றிதழ்கள் சமர்பிக்கப்படாவிடில் மின் துண்டிப்பு செய்யப்படும் என்ற அறிவிப்புகளை வழங்கியுள்ளார். வியாபாரிகள் சங்கமும், இது சம்பந்தமாக, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 8.8.2012 மனு செய்துள்ளனர். ஆனால் கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம் புதிதாக அமைக்கப்பட்டது என்பதினால் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியாளரால் நியமிக்கப்படாமல் உள்ளதால், மேற்கண்ட மனு நிலுவையில் உள்ளது. குறைதீர்க்கும் மன்றத்திற்கு செய்யப்பட்ட மனு நிலுவையில் உள்ளதால், மேல் முறையீட்டாளர், மின் குறை தீர்ப்பாளரிடம், மின் துண்டிப்பு நடவடிக்கையை நிறுத்தும்படி மனு செய்துள்ளார். கள்ளக் குறிச்சி மின்பகிர்மான வட்டத்தில் மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படாததாலும் மேற்கண்ட மனு, குறை தீர்க்கும் மன்றத்தில் 2 மாதஙகளுக்கு மேலாக நிலுவையில் உள்ளதாலும், மேற்கண்ட மனு மேல் முறையீட்டு மனு எண் 54/2012 ஆக, மின் குறை தீர்ப்பாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

## 3. <u>மேல் முறையீட்டாளரின் மனுவில் உள்ள வாதஙகள்:</u>

(i) அவர்கள் புதுப்பபட்டு அண்ணா நகரில் சுமார் 60 கடைகளில் (மேல்முறையீட்டாளர் அளித்துள்ள பட்டியலின்படி 58 கடைகள்) 30 ஆண்டுகளாக வியாபாரம் செய்து வருகின்றனர். அக்கடைகளுக்கு மின்சார

வாரியம் மூலம் மின் இணைப்பு பெற்று மின்சாரம் பயன்படுத்தி வருகின்றனர். அதற்கான மின் கட்டணமும் செலுத்தி வருகின்றனர்.

(ii) 26.04.2012 அன்று உதவி மின் பொறியாளர் அவர்களிடமிருந்து வணிக மின் இணைப்பு உள்ள இடத்தின் உரிமைச்சான்று வட்டாட்சியரிடம் பெற்றுக்கொடுத்தால் தான் மின் இணைப்பு தொடர்ந்து இருக்கும் இல்லை என்றால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்று தொடர்ந்து நான்கு கடிதம் வந்துள்ளது.

(iii) அவர்களால் 18.06.2012 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் முறையீடு செய்யப்பட்டது. ஆணையத்திடமிருந்து குறை தீர்க்கும் மன்ற தலைவரிடம் (மேற்பார்வை பொறியாளர்) மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் விழுப்புரம் மின் பகிர்மான வட்டம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் விழுப்புரம் 605602 அவர்களிடம் முறையீடு செய்யுமாறு 4.7.2012 அன்று கடிதம் வந்தது. அவர்கள் 08.08.2012 அன்று குறை தீர்க்கும் மன்ற தலைவர் விழுப்புரம் அவர்களிடம் முறையீடு செய்துள்ளனர்.

(iv) 10.08.2012 மற்றும் 17.08.2012 அன்று மேற்பார்வை பொறியாளர் கள்ளக்குறிச்சி அவர்களிடம் இருந்து இரண்டு கடிதம் வந்துள்ளது. அவர்களின் மனு மீது விசாரனை கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டத்தில் இன்னும் துவக்கப்படவில்லை. மாவட்ட ஆட்சியாளர் இரண்டு நபர் கொண்ட குழு அமைத்தபின்னர் தான் மனு மீதான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும். அதுவரை மனு நிலுவையில் வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது .

(v) அதற்குள் 12.12.2012 அன்று உதவி மின் பொறியாளர் புதுப்பட்டு அவர்களிடமிருந்து மின் இனைப்பு இன்னும் 7 நாட்களுக்குள் துண்டிக்கப்படும் என்று கடிதம் வந்துள்ளது. ஆகவே இந்த 60 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது மின் இனைப்பு துண்டிப்பு நடவடிக்கை தடுத்து நிறுத்துமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையில் உள்ள வாதஙகள்:</u>

(i) புதுப்பட்டு கிராமம் திரு. கருப்பமுதலியார் த/பெ. நாராயண முதலியார் அவர்கள் வணிக மின் இணைப்பு எண். 471, புதுப்பட்டு பகிர்மானத்தில் பெற்று உள்ளார். இதன் விண்ணப்ப சர்வே எண். 73/1 என காட்டப்பட்டுள்ளது. ஆனால் புறம் போக்கு சர்வே எண். 77/2ல் மின் இணைப்பு பெற்று உள்ளார்.

(ii) மேற்படி கருப்ப முதலியார் அவர்கள் மேற்கண்ட தனது இடத்தையும் அதில் உள்ள மின் இணைப்பு எண். 471 ஐயும், பதிவு செய்யப்படாத சாசனத்தின் மூலம் திரு. ராமு செட்டியார் என்பவருக்கு கிரையம் கொடுத்து உள்ளார்.

(iii) கிரையதாரர் திரு. ராமு செட்டியார் அவர்கள் தான் கிரையம் பெற்ற இடத்தை 1. திரு. கதிர்வேல் 2. திரு. பரசுராமன் 3. திரு. சண்முகம் 4. திரு. ஏழுமலை ஆகிய நால்வருக்கும் நான்காக பிரித்து பதிவு செய்யப்படாத சாசனத்தின் மூலம் மேற்கண்ட புறம்போக்கு இடத்தை கிரையம் கொடுத்துள்ளார்.

(iv) கிரையம் பெற்றவர்களில் திரு. கதிர்வேல் என்பவரது கடை பாகத்தில் மின் இணைப்பு எண். 471 வரப்பெற்றதால் இவர் மற்ற மூன்று நபர்களுக்கு மின் இணைப்பு கொடுக்க மறுத்துள்ளார். அதனால் பரசுராமன், சண்முகம் ஆகிய இருவரும் மேற்கண்ட மின் இணைப்பு உள்ள இடம் அரசுக்கு சொந்தமான குளத்து புறம்போக்கு சர்வே எண். 77/2 என புகார் அளித்து உள்ளனர்.

(v) அதன் படி மின் இணைப்பு எண். 471 உள்ள இடம் புறம்போக்கில் இருப்பதால் வருவாய் துறையிடம் இருந்து தடையில்லா சான்று அல்லது உரிமை சான்று பெற்று கொடுக்குமாறு வாரியத்தால் 22.06.2011 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டது.

(vi) ஆனால் உரிய காலத்திற்குள் தடையில்லா சான்றோ அல்லது உரிமை சான்றோ, பெற்றுத்தராததாலும் மின் இணைப்பு எண். 471 பெறும் போது குளத்து புறம்போக்கு எண். 77/2 ஐ மறைத்து 73/1 என சான்றுஅளித்து வாரியத்தை ஏமாற்றும் நோக்கோடு மின் இணைப்பு பெற்று இருப்பதாலும், மின் இணைப்பு எண் 471, புதுப்பட்டு பகிர்மான உள்ள இடம் அரசுக்கு சொந்தமான மஙக குளத்து புறம்போக்கு என நிர்வாக அலுவலர் சான்று அளித்ததாலும், வாரிய விதி முறைகளின் படி மேற்படி மின் இணைப்பு 28.04.2011 அன்று ஏரியல் மின் துண்டிப்பு செய்யப்பட்டது.

(vii) இதனை தொடர்ந்து திரு. கதிர்வேல் அவர்கள் தனது மின் இணைப்பை போல் 66 கடை மின் இணைப்புகள் புறம்போக்கில் இருப்பதாக கூறி உரிய பட்டியலுடன் புகார் மனு அளித்து நடவடிக்கை எடுக்க கோரியதன் பேரில் தவறாக உரிமை சான்று அளித்து பெறப்பட்ட மின் இணைப்பு உள்ள இடம், அதன் சர்வே எண் ஆகிய விவரஙகள் கிராம நிர்வாக அலுவலர் அவர்களிடம் கோரப்பட்டு 58 மின் இணைப்புகள் (57 வணிகம் + 1 தொழில்) உள்ள இடம் புறம்போக்கில் உள்ளது என சான்று அளித்துள்ளார். கிராம நிர்வாக அலுவலர் புதுப்பட்டு சான்றின்

அடிப்படையில் 58 கடை மின் இணைப்பு உரிமையாளர்களிடமும் உரிமை சான்று அல்லது தடையில்லா சான்று பெற்று அளிக்க கோரி 10.01.2012, 26.04.2012, 31.05.2012 மற்றும் 11.06.2012 ஆகிய தேதிகளில் நோட்டீஸ் வழஙகப்பட்டது. ஆனால் மேற்படி மின் இணைப்பு உரிமையாளர்கள் எவ்வித சான்றும் கொடுக்க முன் வரவில்லை.

(viii) மேற்கண்ட மின் இணைப்புகள் அனைத்தும் 1980 முதல் 2009 வரை வழஙகப்பட்டவை இவைகளில் 49 மின் இணைப்புகள் தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு வழஙகப்பட்டது. சஙகராபுரம் கோட்டம் 1996 ல் உருவாக்கப்பட்டதால் அக்கோட்டத்தில் உள்ள பதிவேடுகளை ஆராய்ந்ததில் 33 மின் இணைப்புகளுக்கான விவரஙகள் மட்டுமே கிடைக்கப்பெற்றன. மேற்படி 58 மின் இணைப்பு உரிமையாளர்களில் 19 பேர் சஙகராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு பதிந்து மின் இணைப்பு துண்டிக்க கூடாது என கோரி உள்ளனர். நீதிமன்றத்தில் இவ்வழக்கு 18.10.2012 மற்றும் 15.12.2012 ஆகிய தினஙகளில் நடைபெற்று இன்று வரை எவ்வித தடை உத்தரவும் வழஙகப்படவில்லை. மேற்படி விவரஙகளை தெரிவித்து, குளத்து புறம்போக்கு மற்றும் ஜில்லா போர்டு பாட்டை புறம்போக்கில் பெற்றுள்ள மின் இணைப்பை துண்டிப்பு செய்ய அரசு வழக்கறிஞர் சஙகராபுரம் அவர்களுக்கு 22.06.2012 மற்றும் 10.07.2012 ல் சட்டக்கருத்துரு கோரப்பட்டது.

(ix) அவரது 27.07.2012 சட்டக்கருத்துருவில் நீதிமன்ற தடை உத்தரவு எதுவும் இல்லை என்பதால் மின் துண்டிப்பு செய்யலாம் எனவும் வழக்கு முடியும் போது நீதிமன்ற தீர்ப்பின் படி செயல்படலாம் எனவும் சட்ட கருத்துரு வழஙகியுள்ளார்.

(x) மேலும் மேற்படி மின் இணைப்புகளை மின் துண்டிப்பு செய்ய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக சட்ட ஆலோசனை மையத்திற்கு சட்ட கருத்துரு வேண்டி கோப்பு அனுப்பப்பட்டு 07.08.2012ல் கருத்துரு பெறப்பட்டது. அதில் சட்ட ஆலோசகர் அவர்கள் தலைமை பொறியாளர் / வணிகம் / சென்னை அவர்களின் ஆலோசனை பெற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது. மேற்பார்வை பொறியாளர்/கமிபவ/கள்ளக்குறிச்சி அவர்கள் மூலமாக 24.9.2012 அன்று தலைமைப் பொறியாளர்/வணிகம்/சென்னை அவர்களிடம் சட்டக்கருத்துரு கோரப்பட்டு Lr.No.CE/Com/EE3/AEE2/ F.LT.SC/D.546/12. Dt/12.10.2012 -ன் மூலம் இதுவரை வழஙகப்பட்டுள்ள வாரிய உத்தரவு மற்றும் அரசு வழக்கறிஞரின் சட்டக் கருத்துரு மற்றும்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சட்ட கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழஙகப்பட்டுள்ளது.

(xi) இதன் அடிப்படையில் மேற்படி மின் நுகர்வோர்களுக்கு வாரிய விதிமுறைகளின்படி உரிய துறையின் தடையில்லா சான்று அல்லது உரிமை சான்று கேட்டு நோட்டீஸ் வழஙகப்பட்டு, தவறும் பட்சத்தில்மின் துண்டிப்பு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நோட்டீஸ் காலக்கெடு 19.12.2012 வரை வழஙகப்பட்டது. காலக்கெடு முடிந்ததால் 20.12.2012 அன்று காலை களப்பணியாளர்களுக்கு மின் துண்டிப்பு செய்ய பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு மின் இணைப்பு எண்கள் 411,1310,247,654, 531,128 ஆகிய மின் இணைப்புகள் மட்டுமே மின் துண்டிப்பு செய்யப்பட்ட நிலையில் நுகர்வோர் மற்றும் பொது மக்கள் மின் துண்டிப்பை எதிர்த்து சாலை மறியலில் சம்பவ இடத்தில் ஈடுபட்டதால் சட்டம் ஒழுஙகு பிரச்சனையை தீர்க்கும் பொருட்டு தற்பொழுது மின் இணைப்புகளை துண்டிப்பு செய்ய வேண்டாம் என்று காவல் ஆய்வாளர் அவர்கள் தெரிவித்ததின் அடிப்படையிலும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் படியும் மீதள்ள 52 மின் இணைப்புகளின் மின் துண்டிப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

(xii) இதற்கிடையில் திரு. கதிர்வேலு புதுப்பட்டு மற்றும் திரு. ராசு, தலைவர், வியாபாரிகள் சஙகம், புதுப்பட்டு ஆகியோர்கள் இப்பொருள் குறித்து மின் நுகர்வோர் குறை தீர்ப்பு மன்றம், கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டத்திற்கு 08.08.2012 மற்றும் 18.08.2012 தேதியிட்ட மனுக்கள் அனுப்பியுள்ளனர். ஆனால் இது புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மின் பகிர்மான வட்டம் என்பதாலும், இவ்வட்டத்திற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் அமைத்திட வேண்டி மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களுக்கு கோப்பு அனுப்பப்பட்டு, அக் கோப்பு அலுவலக நடைமுறையில் உள்ளதாலும் அம் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க இயலவில்லை. இந்த விபரம் மேற்படி இருவருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5. <u>மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

மேல் முறையீட்டாளர் மற்றும், எதிர் மனுதாரர் ஆகிய இருவரும் தஙகளுடைய வாதஙகளை எடுத்துரைப்பதற்கு வசதியாக 14.2.2013 அன்று மின் குறை தீர்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

## 6. மேல்முறையீட்டாளரின் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதஙகள்:

மேல் முறையீட்டாளர் திரு. இராசு அவர்கள் தன்னுடைய தரப்பு வாதஙகளை எடுத்துரைத்தார். அவர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதஙகளை வலியுறுத்தினார். மேலும், தன்னுடைய தரப்பு வாதஙகளாக கீழ்கண்டவற்றை எடுத்துத்தார்.

(i) சுமார் 30 வருடஙகளுக்கு முன் கொடுக்கப்பட்ட மின் இணைப்புகளுக்கு, தற்பொழுது உரிமை சான்று அல்லது வட்டாட்சியரிடமிருந்து தடையில்லா சான்று கேட்பது தவறு என்றும் அவ்வாறு கேட்பது காலஙகடந்த செயல் என்றும் வாதிட்டார்.

(ii) கொடுக்கப்பட்ட மின் இணைப்புகளை துண்டிப்பது என்பது அஙகு வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் செயல் என்று கூறினார்.

(iii) தற்பொழுது அந்த மின் இணைப்புகளை உபயோகிப்பவர்களுக்கு அது மின்னிணைப்பை பெறும்பொழுது தவறான சான்று கொடுத்து பெறப்பட்டது என்று கூறி, மின் இணைப்பை துண்டிப்பது தவறு செய்யாதவர்களுக்கு தண்டனை கொடுப்பது என்று வாதிட்டார்.

(iv) மேலும், சஙகராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கில் சம்பந்தப்படாத மற்றவர்களுக்கான மின் இணைப்பின் மீது மின் குறைதீர்ப்பாளர், விசாரித்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும் கூறினார்.

## 7. எதிர்மனுதாரரின் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதஙகள்:

எதிர் மனுதாரரின் சார்பில் திருமதி. S. பிரேமா, உதவி செயற் பொறியாளர் மேற்கு சஙகராபுரம் (கூடுதல் பொறுப்பு) அவர்கள் கலந்து கொண்டு எதிர் மனுதாரரின் எதிர் உரையில் உள்ள வாதஙகளை வலியுறுத்தினார் . மேலும், தன்னுடைய தரப்பு வாதஙகளாக கீழ் கண்டவற்றை எடுத்துரைத்தார்.

(i) மேற்கண்ட மின் இணைப்புகள் எல்லாமே தமிழ்நாடு மின்சார வழஙகல் விதித் தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின்சார பகிர்மான தொகுப்புகள் வெளியிடப்படுவதற்கு முன்பு கொடுக்கப்பட்ட மின் இணைப்புகள் என்று தெரிவித்தார்.

(ii) எனவே, மின்சாரம் வழஙகும் பொழுது இருந்த மின்சார வாரியத்தின் விதிமுறைகளும் வரையரைகளும் (Terms & Conditions) தான் மேற்படி மின் இணைப்புகளுக்கு பொருந்தும் என்றும் வாதிட்டார்.

(iii) மேலும் மின்சார வாரியத்தின் விதிமுறைகளும் வரையறைகளின் (Terms & Conditions) படி, எந்த ஒரு மின் இணைப்பும் தவறுதலான தகவல் கொடுத்து அல்லது, மோசடியாக பெறப்பட்டிருந்தாலும், அந்த மின் இணைப்பு துண்டிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

(iv) மேலும் அவர், வாரிய விதிகளின்படி வீட்டு உபயோகத்திற்கு மட்டும் தான் புறம்போக்கு நிலஙகளில், மின் இணைப்பு வழஙக முடியும் என்றும் வாதிட்டார்.

(v) மேற்படி 58 பேர்களில், 19 மின் இணைப்பு உரிமையாளர்கள் சஙகராபுரம் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு பதிந்து மின் இணைப்பு துண்டிக்க கூடாது என்று கோரி உள்ளனர் என்றும் அந்த வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் தெரிவித்தார்.

(vi) மேலும் அரசு வழக்கறிஞரின் சட்டகருத்துருவில் நீதிமன்ற தடை உத்தரவு எதுவும் இல்லை என்பதால் மின்துண்டிப்பு செய்யலாம் என்றும் வழக்கு முடியும் பொழுது, நீதிமன்ற தீர்ப்பின் படி செயல் படலாம் என்றும் கூறியுள்ள தாகவும் தெரிவித்தார்.

(vii) மின் துண்டிப்பை எதிர்த்து சாலை மறியலில் மின்நுகர்வோர் மற்றும் பொதுமக்கள் ஈடுபட்டதால் சட்டம் ஒழுஙகு பிரச்சனையை தீர்க்கும் பொருட்டு தற்பொழுது மின் இணைப்புகளை துண்டிப்பு செய்ய வேண்டாம் என்று காவல் ஆய்வாளர் தெரிவித்ததன் அடிப்படையிலும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் படியும் மீதமுள்ள 52 இணைப்புகளின் மின்துண்டிப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

**8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>**

8.1 மேற்படி 58 மின் இணைப்பு உரிமையாளர்களில் எதிர்மனுதாரர் 19 மின் இணைப்பு உரிமையாளர்கள் சஙகராபுரம் மாவட்ட உரிமையயில் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து மின் இணைப்பு துண்டிக்க கூடாது என்று கோரியுள்ளார்கள் என்றும் மேற்கண்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.2 நீதி மன்றத்தில் இந்த நுதல் பொருள் சம்பந்தமாக வழக்கு உள்ளது என்று எதிர்மனுதாரர் கூறியுள்ளதால், இந்த மேல் முறையீட்டு மனுவை மின் குறைதீர்ப்பாளர் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியுமா என்று முதற்கண் தீர்வு செய்யப்பட வேண்டியது உள்ளது.

**8.3** எனவே, இது சம்பந்தமாக, மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறை தீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகளில் மின் குறைதீர்ப்பாளரால் விசாரணைக்கு ஏற்கப்படும் முறையீடுகள் பற்றிய விதி **17(4)** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"(4) கீழ்க் குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*
*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரர் குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த இரண்டு மாதஙகளுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*
*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதஙகளுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*
*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*
*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழஙகியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*
*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது."*

8.4 மேற்கண்ட விதி 17(4)(ஈ)இன் படி, மின்குறைதீர்ப்பாளரிடம் அளிக்கப்பட்ட முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள புகார் ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையிலிருந்தாலோ, அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழஙகியுள்ள புகாராக இருந்தாலோ, அவ்வாறான முறையீட்டை, மின் குறை தீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிகிறது.

**8.5** இந்த வழக்கிலுள்ள பொருள் சம்பந்தமாக, **58** மின் இணைப்பு உரிமையாளர்களில் **19** நபர்கள் சஙகராபுரம் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு பதிந்து மின் இணைப்பை துண்டிக்க கூடாது என்று அவர்கள் கோரியுள்ள வழக்குகள் நிலுவையிலுள்ளன என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேல் முறையீட்டாளரும், அவ்வாறு வழக்குகள் உள்ளன, என்று ஒத்துக் கொண்டுள்ளார். ஆனால் அந்த **19** பேரைத் தவிர மற்றவர்களுடைய மின் இணைப்புகளில் உள்ள பிரச்சனைக்கு தீர்வு மின்குறைதீர்ப்பாளர் வழஙகலாமே என்று வாதிட்டார்.

8.6 நிலுவையில் உள்ள வழக்குகளில் உள்ள வழக்கின் நுதல் பொருளும், மற்ற 39 பேர்களின் வழக்கிலுள்ள நுதல்பொருளும் (same subject matter) ஒன்றாக இருப்பதினால் அவற்றினையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்று தெரிகிறது.

## 9. <u>முடிவுரை :</u>

9.1 மேற்கூறிய மன்ற விதி 17(4)(ஈ)இன்படி, மின்குறைதீர்ப்பாளரிடம் அளிக்கப்பட்ட முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள புகார் ஏதாவது நீதி மன்றத்தில் நிலுவையிலிருந்தால், அத்தகைய முறையீட்டை மின்குறை தீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெளிவாக உரைக்கப்பட்டுள்ளதாலும், மேல் முறையீட்டில் உள்ள கோரிக்கை சம்பந்தமாக, சஙகராபுரம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ளது என்பதை மேல் முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் ஒத்துக்கொள்வதாலும், மேற்கண்ட மேல் முறையீட்டு மனு எண் 54/2012 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு செய்யப்படுகிறது.

9.2 மேற்கண்ட தீர்வுடன், மனு எண் 54 / 2012 மின்குறை தீர்ப்பாளரால் இறுதி முடிவு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(ஆ. தர்மராஜ்)
**மின்குறை தீர்ப்பாளர்**

பெறுநர்

1. திரு. M. இராசு,
தலைவர் அனைத்து வியாபாரிகள் சங்கம்,
புதுப்பட்டு .P.O.
சஙகராபுரம் (T.K.)

2. மேற்பார்வை பொறியாளர்,
கள்ளக் குறிச்சி மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
கள்ளக் குறிச்சி.

3. தலைவர்
தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி வளாகம்
அண்ணாசாலை, சென்னை – 2.

4. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம்
எண். 19A, ருக்மணி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

5. உதவி இயக்குநர் ( கணினி )
தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம்
எண். 19A, ருக்மணி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.
} **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**